மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருச்சுழி.

அசல் வழக்கு எண். 24/2021

வாதி/பிரதிவாதி சாட்சியின் வாக்குமூலம் (1873 ம் ஆண்டு சாட்சியச்சட்டம் 44 வது பிரிவு 5 ஆவது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி.R.கலைச்செல்வி, கிரேடு III என்பவரால் ஆணையிட்டு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர் : நாகலட்சுமி (வா.சா.1) | சாதி : |
| த/பெ.க/பெ : ஜெயராம் | மதம் : |
| கிராமம் : | தொழில் : |
| தாலுகா : | வயது : |

28.02.2025

வாதி தரப்பு சாட்சி 1 மீண்டும் அழைத்ததின் பேரில் பிரதிவாதிகள் தரப்பு குறுக்குவிசாரணை –

1. தாவா சொத்தின் சர்வே எண் தெரியுமா என்றால் படிக்கவில்லை எனக்கு தெரியாது. விஸ்தீரணம், நான்குமால் தெரியுமா என்றால் நான் படிக்கவில்லை எனக்கு தெரியாது. தாவா சொத்து ஆதியில் யாருக்கு பாத்தியம் என்றால் எனது கணவருடைய தகப்பனாருக்கு பாத்தியம். எனது கணவருடைய தகப்பனாருக்கு எவ்வாறு பாத்தியம் என்றால் மாச்சா நாயக்கருக்கு பாத்தியம். மாச்சா நாயக்கருக்கு எவ்வாறு பாத்தியம் என்று எனக்கு தெரியாது. மாச்சா நாயக்கருக்கு எத்தனை பிள்ளைகள் என்றால் 4 பிள்ளைகள் ஆவார்கள்.

2. மாச்சா நாயக்கரின் பிள்ளைகள் பெயர் தெரியாது. பிராதுக்கு விபரங்கள் அனைத்தையும் நான் சொன்னேன். பிராதில் தாவா சொத்து ஆதியில் கஞ்சநாயக்கருக்கு பாத்தியம் என்று சொல்லி உள்ளதற்கு ஏதாவது ஆவணங்கள் தாக்கல் செய்திருக்கிறேனா என்றால் இல்லை. பிராது வரைபடம் பற்றி எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. கஞ்சநாயக்கருக்கு பெரிய நாகலிங்க நாயக்கர், சின்ன நாகலிங்க நாயக்கர், கந்தவேல், நாகலிங்கம் ஆகியோர் வாரிசுகள் என்பதற்கு ஏதாவது ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் எனக்கு தெரியாது.

3. கஞ்சநாயக்கர் மகன் சின்ன நாகலிங்கம் வாரிசு இன்றி இறந்ததற்கு வாரிசு சான்றிதழ், இறப்பு சான்றிதழ் தாக்கல் செய்துள்ளேனா என்றால் எனக்கு தெரியாது. கந்தவேல் நாயக்கரின் மற்ற வாரிசுகள் அவரது குடும்ப சொத்துக்களை பாகம் பிரித்த விபரம் எனக்கு தெரியாது. அதில் யார் யாருக்குஎன்ன என்ன சொத்து பிரித்து கொண்டார்கள் என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியாது. எனது மாமனார் எனது

கணவர் பெயரில் கிரையம் வாங்குவதற்கு முன்பு மேற்படி தாவா சொத்தை யார் அனுபவித்து வந்தார்கள் என்று எனக்கு தெரியாது.

4. சிவத்தையா நாயக்கர் யார் என்றால் மாச்சா நாயக்கரின் தகப்பனார் ஆவார். சிவத்தையா நாயக்கருக்கு தாவா சொத்து எவ்வாறு பாத்தியம் என்றால் எனக்கு தெரியாது. சிவத்தைய நாயக்கருக்கு இரண்டு பிள்ளைகள் மாச்சா நாயக்கர், பாண்டி நாயக்கர் ஆவார்கள். மாச்சா நாயக்கர், பாண்டி நாயக்கருக்குள் பாகம் பிரித்து கொண்டார்களா என்று எனக்கு தெரியாது. தாவா சொத்து மாச்சா நாயக்கருக்கு எப்படி கிடைத்தது அவர் எதன் அடிப்படையில் எனது கணவருக்கு கிரையம் கொடுத்தார் என்ற விபரம் எனக்கு தெரியாது.

5. எனது மாமனார் பெயர் பாலுச்சாமி நாயக்கர் ஆவார். பாலு நாயக்கருக்கு எத்தனை பிள்ளைகள் 4 பிள்ளைகள் அவர்களின் பெயர் ஜெயராமன் (எனது கணவர்) மற்றும் பெண் பிள்ளைகள். மாச்சா நாயக்கர் கிரையம் கொடுத்த பத்திரத்தில் வாசாஆ 2 ல் தாவா சொத்தில் எத்தனையாவது லக்க சொத்து என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எனது பிராதிலும் வாக்குமூலத்திலும் வாசாஆ 2 ல் தாவா சொத்து 2 வது இலக்கம் என்று கூறியுள்ளேன் என்றால் சரிதான்.

6. வாசாஆ 2 ல் உள்ள நான்குமால் ராமக்காள் புஞ்சைக்கும் கிழக்கு கந்தசாமி நாயக்கர், கந்தவேல் நாயக்கர், வகையறா, பொம்ம நாயக்கர், கந்தசாமி நாயக்கர், இவர்கள் கொல்லை நிலத்திற்கும் வடக்கு, குமரையா நாயக்கர் புஞ்சைக்கும் வ்ண்டிபாதைக்கும் மேற்கும், என் தகப்பனாரல் இனாமாக கொடுத்த அதில் கட்டியுள்ள பள்ளிகூட கட்டிடத்திற்கும் காலி நிலத்திற்கும் தெற்கு என்றால் சரிதான். பள்ளி கூட கட்டிடற்கும் காலி நிலத்திற்கும் தெற்கு என்று குறிப்பிடப்பட்டுள்ள காலி நிலம் தான் தாவா சொத்து என்றால் சரியல்ல.

7. மேற்படி காலி இடத்தில் தான் நான் குடியிருந்து வருகிறேன். வாசாஆ 2 பத்திரத்தின் மூலமாக காலி இடத்திற்கு தெற்கே உள்ள இடத்தை கிரையம் வாங்கி கொண்டு எவ்வாறு காலி இடத்தில் வீடு கட்டி குடியிருக்க முடியும் என்றால் எனது மாமனார் கொடுத்த சொத்தில் நாங்கள் வீடு கட்டி குடியிருந்து வருகிறோம். பிராதில் இன்றைய வரைக்கும் தாவா சொத்தை காலி இடமாக காட்டியுள்ளேன் என்றால் சரியல்ல, வீடு கட்டியுள்ளேன். தாவா சொத்தில் உள்ள வீட்டை காட்டி பிராதை சீர்த்தம்

செய்யவில்லை அதற்கான நீதிமன்ற கட்டணத்தையும் கட்டவில்லை என்றால் நான் வீட்டு வரி செலுத்தி வருகிறேன்.

8. 2013ம் வருடம் தாவா சொத்தை பார்வையிட வேண்டும் என்று பிரதிவாதிகளான 4 முதல் 7 வரையானவர்கள் நீதிமன்ற ஆணையரை நியமிக்க வேண்டி மனு செய்துள்ளார்கள் என்றால் சரிதான். நான் 2013ம் வருடம் தாவா சொத்தில் வீடு கட்டினேன் என்றால் சரிதான். செங்கல் கட்டிடம் கட்டிமேற்கூரை ஆஸ்பெடாஸ் ஓடு போட்டுள்ளேன் என்றால் சரிதான். எனக்கும் எனது கணவருக்கும் 4 பிள்ளைகள், ராஜேந்திரன், நாகேந்திரன், ராசம்மாள், நாகவள்ளி ஆகியோர்கள். எனது கணவருக்கு பாத்தியப்பட்ட சொத்தை எனக்கு உயிலோ, தானசெட்டில்மெண்டோ எனக்கு எழுதி தரவில்லை என்றால் சரிதான்.

9. நான் விளம்புகை பரிகாரம் கேட்டபடியால் என் கணவரின் மற்ற வாரிசுகளை வழக்கில் சேர்க்காததால் வழக்கு தேவையான தரப்பினரை சேர்க்காத தோசத்திற்காக பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வாசாஆ 2ல் காண்பிக்கப்பட்டுள்ள வடக்குமாலில் உள்ள காலி நிலம் தான் இந்த வழக்கில் தாவா சொத்து என்றால்சரியல்ல. தாவா சொத்தில் தெற்கே கிரையம் வாங்கி கொண்டு ஊர் பொதுக்கு பாத்தியப்பட்ட சொத்தில் அக்கிரமமாக வீடு கட்டி இடஞ்சல் செய்து வருகிறேன் என்றால் சரியல்ல. எனது கணவருக்கோ, எனது கணவருக்கு எழுதி கொடுத்த மாச்சா நாயக்கருக்கோ, அவர்களது முன்னோர்களோ தாவா சொத்தில் எந்த காலத்திலும் பாத்தியம் கிடையாது அவர்கள் அனுபவம் செய்ததும் கிடையாது என்றால் சரியல்ல.

10. தாவா சொத்தின் புல எண் 181/3 சர்க்கார் புறம்போக்கு காலி இடம் என்றுதான் வகைபாடு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.தாவா சொத்தின் வடக்கே பஞ்சாயத்து யூனியன் பள்ளிகூடம், சத்துணவு கூடம், நரிக்குடி ஊராட்சி ஒன்றிய கட்டிடம் உள்ளது என்றால் சரிதான். கிழக்கே ரோடு உள்ளது என்றால் சரிதான். தாவா சொத்தின் தெற்கு பகுதியில் தான் எனக்கு இடம் உள்ளது என்றால் எனக்கு தெரியாது. பிரதிவாதிகள் தரப்பில் நீதிமன்ற ஆணையர் நியமன மனு தாக்கல் செய்தபின்பு அவசரமான வீடுமாதிரி கட்டிடத்தை கட்டி ஆஸ் படாஸ் ஓடு போட்டுள்ளேன் என்றால் சரியல்ல. தாவா சொத்து வழியாகதான் பள்ளி குழந்தைகள் நடைபாதையாகவும் பள்ளி குழந்தைகள் விளையாட்டு விழா நடத்துவதற்கும் பயன்படுத்துகிறார்கள் என்றால் சரியல்ல. அதை இடைஞ்சல் செய்யும்நோக்கத்தோடு நான் இவ்வழக்கு தாவா சொத்தில் அக்கிரமமாக

வீடு கட்டியுள்ளேன் என்றால் சரியல்ல. தாவா சொத்து பிராது தேதியிலே ரூ2 லட்சம் மதிப்புள்ளது என்றாலும் இந்நீதிமன்றத்திற்கு இவ்வழக்கை விசாரிப்பதற்கு அதிகாரம் கிடையாது என்றால் சரியல்ல.

11. வாசாஆ 2 பத்திரத்தில் தாவா சொத்து இல்லை என்றால் சரியல்ல. நான்தாக்கல் செய்துள்ள வாசாஆ 6 வீட்டு வரி ரசீதுகள் வழக்கிற்கு பிற்பாடு ஏற்பட்ட ரசீதுகள் ஆகும் என்றால் சரியல்ல. பிராதிலும், வாக்குமூலத்திலும் சொல்லியுள்ள வாரிசுகள் விபரங்கள் அனைத்தும் பொய் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள பிராது வரைபடமும் சொத்தில் உள்ள நான்குமாலும் தவறானவை என்றால் சரியல்ல. தாவா சொத்தில் எந்த வித பாத்தியமும் இல்லை என்றாலும் தாவா வழக்கை தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை –**

இல்லை.